

# Community Connectors

## இயலாமையுடனான பல்கலாச்சார மக்களுக்கான ஆதரவு

சரியான உதவியைப் பெற்றுக்கொடுத்தல், மக்களின் வாழ்க்கையை மாற்றலாம்.

## இயலாமையுடனான பல்கலாச்சார மக்களை NDIS(என்டிஐஎஸ்) உடன் தொடர்புபடுத்துதல்.

உங்களுக்கு இயலாமை இருக்கிறதா அல்லது National Disability Insurance Scheme (NDIS)வழங்கக்கூடிய உதவியிலிருந்து பயன் பெறக்கூடிய ஒருவரைப் பராமரிக்கிறீர்களா?

NDIS உடன் உங்களை இணைப்பதற்கு உங்கள் சமூகத்திற்குள் கலாச்சார ரீதியாக உருவாக்கப்பட்ட ஆதரவை உங்களுக்குத் தருவதற்கு இந்த Community Connectors திட்டம் இங்கு உண்டு.

### NDIS என்பது என்ன?

NDIS என்பது இயலாமையுடனான மக்களுக்கு சேவைகளையும் ஆதரவையும் வழங்கும் ஒரு இலவச அரசாங்கத் திட்டமாகும்.

### எவ்வாறு இந்த NDIS எனக்கு உதவ முடியும்?

இதற்குள் அடங்கக்கூடிய ஆதரவுகள் மற்றும் சேவைகள்:

- தங்களது நாளாந்த சொந்தச் செயற்பாடுகளுக்கு உதவுதல்
- வெற்றிகரமாக ஒரு வேலையைப் பெற்றுக்கொள்ள உங்களை அனுமதிக்க அல்லது வேலையைத் தொடர்ந்து செய்வதற்கான வேலையிட உதவி
- உங்களுடைய வீட்டுச் சுற்றாடலைப் பராமரிப்பதற்கு உங்களை அனுமத்திக்கக்கூடிய வீட்டுவேலைகளைச் செய்வதற்கான உதவி
- நடமாடும் உதவி அத்துடன்/ அல்லது உபகரணத்தைக் கொள்வனவு செய்தல்

### Community Connector என்றால் என்ன?

கலாச்சார மற்றும் மொழி ரீதியாக வேறுபட்ட அத்துடன் ஆங்கிலம் பேசாத பின்னணியைக்கொண்ட மக்களுக்கு Community Connectors (சமூக இணைப்பாளர்கள்) NDS ஐ நாடிச்செல்லும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள துணைசெய்தல்.

அவர்கள் உங்களுக்கும், NDIS க்குமிடையில் இருபக்கத்தினரையும் இணைக்கும் ஒரு நபராகச் செயற்பட்டு உதவுவார்கள்.

பின்வருவனவற்றிற்கு உங்கள் Community Connector உதவுவார்:

- NDIS க்கு விண்ணப்பிப்பதற்கு
- உங்கள் உள்ளூர் NDIS தொடர்புகளுடன் உங்களை இணைப்பதற்கு
- விளங்கிக்கொள்ளவும் மற்றும் NDIS சேவைகளை சிறப்பாக உபயோகிக்கவும் ஆதரவை வழங்குவதற்கு.

### உங்கள் உள்ளூர் Community Connectors உடன் தொடர்புபடுத்தல்:

### உரைபெயர்ப்பாளர்களைப் பெறும் வாய்ப்பு

இந்தப் பக்கத்திலுள்ள பொருளடக்கத்தைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தொலைபேசி உரைபெயர்ப்பு சேவையை (TIS) **(131 450)** அழைத்து மேலுள்ள உங்கள் உள்ளூர் சேவை வழங்குனரைத் தொடர்பு கொள்ளுமாறு தயவுசெய்து கேளுங்கள்.

*NDIS, Federation of Ethnic Communities' Councils மற்றும் National Ethnic Disability Alliance ஆகியவற்றிற்கு இடையிலான ஒரு இணக்கப்பாடுதான் National Community Connectors Program ஆகும்.இது National Disability Insurance Agency ஆல் மூலதனமிடப்பட்டுள்ளது.*

பாருங்கள்: **fecca.org.au** அல்லது **neda.org.au**

FECCA Federation of Ethnic Communities' Councils of Australia

NEDA National Ethnic Disability Alliance

I ♥ ndis